

# குன்றின் மேலிட்ட தீபமென விளங்கிய ஆசிரியர் திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள்.

திரு. ஐயம்பிள்ளை பொன்னையா ஆசிரியர் அவர்கள் இருபதாம் நூற்றாண்டில் வேலணையில் முன்னோடியாகத் திகழ்ந்து வேலணையின் அபிவிருத்திப் பணிகளில் முன்னின்றுழைத்த ஒரு சிலருள் சிறப்பான இடத்தைப் பெற்றவர். இவர் கல்வி, சமய, சமூக, அரசியல் பணிகளில் அயராதுழைத்து வேலணையின் உயர்நிலைக்குப் பாடுபட்டவர்.

அமைதி, பொறுமை, சுயநலமின்மை, பிறரை மதிக்கும் பண்பு, கடுஞ்சொல்லின்மை முதலிய பண்புகளால் எல்லோரும் இவரில் பெருமதிப்பு வைத்தனர். எதிரிகள் அற்றவராக யாவராலும் பாராட்டப்பட்டவராக விளங்கினார்.

மேற்காட்டப்பட்ட பெருங்குணம், பேரறிவு, கருமங்களைச் செய்து முடிக்கும் ஆற்றல் ஆகியவற்றால் சமய, சமூக, அரசியல் துறைகளில் அநேக பதவிகளை ஏற்று நடாத்தினார். ஆனால் "இவர் பதவிளைத் தேடிப் போகவில்லை. பதவிகள் இவரைத் தேடி வந்தன". பதவிகளை அடைவதில் போட்டி இல்லை. பொறாமையில்லை. மக்களின் வேண்டுதலின் பேரிலிலேயே பதவிகளை ஏற்றுக் கொண்டார். இவர் வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தில் பதினேழு ஆண்டுகள் தொடர்ந்து தலைவராகக் கடமையாற்றியதிலிருந்து இவருடைய செல்வாக்கை அளவிடலாம்.

பதவிகளை ஏற்றுக் கருமமாற்றுகிறபொழுது காசைக் கையாடினார், காசை வீணான வழியில் செலவழித்தார், அபிவிருத்திக் கருமங்களைச் செய்யாதுவிட்டார் என்பன போன்ற கண்டனங்களுக்கு இடமில்லாமல் நடந்தார்.

## ஆசிரியர் தீவகம்

திரு ஐயம்பிள்ளை – பொன்னையா ஆசிரியர் அவர்கள் மிக இளம் வயதிலேயே அதாவது பதினெட்டு வயதில் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்தில் தனது ஆசிரியப் பணியை ஆரம்பித்தார். உதவியாசிரியராக சரவணை நாகேஸ்வரி வித்தியாலயத்திலும், வேலணை சரஸ்வதி வித்தியாலயத்தில் ஏறக்குறைய பத்து ஆண்டுகளும் கடமையாற்றினார். அதிபராக 1952ஆம் ஆண்டு யா/ஆனைப்பந்தி குருநாதசுவாமி கோவில் தமிழ்ப் பாடசாலையில் நியமனம் பெற்றார்.

அவருடைய ஆசிரியப்பணி மகத்தானது. மிகச் சிறந்த ஆசிரியராகவும், மிகச் சிறந்த நிர்வாகத் திறமையுள்ள அதிபராகவுமிருந்து தான் கடமையாற்றிய பாடசாலைகளின் மாணவர்களைக் கல்வியில் உயர்நிலையடைய வைத்த பெருந்தகையாளர். அவரிடம் கல்வி கற்றவர்கள் பட்டதாரிகளாக, பொறியியலாளராக, வைத்திய கலாநிதிகளாக, வேறு உயர்பதவிகள் பெற்றவர்களாக விளங்குகிறார்கள். அதிலிருந்து அவரின் ஆசிரியப்பணியின் சிறப்பை அறியலாம். அவரிடம் படித்த மாணவர்கள் இங்ஙனமாக உயர்நிலை எய்தியதைக் கண்டு அவரே மிகப்பெரிய சந்தோஷம் அடைந்திருப்பார்.

## ஆத்திசூடி வித்தியாலய அதிபர்

திரு ஐயம்பிள்ளை - பொன்னையா அதிபர் அவர்கள் வேலணை வடக்கின் ஆத்திசூடி வித்தியாசாலையைத் தாபித்தவர்களில் ஒருவராக முக்கியமானவராக இருந்தார். அவ்வாத்திசூடி

வித்தியாசாலையை தாபித்தது மட்டுமன்றி அதன் அதிபராகவும் இருந்தார். அவர் காலத்தில் அப்பாடசாலைக்கு நிரந்தர கட்டிடம் ஒன்றும் கட்டப்பட்டது. அவர் அப்பாடசாலைக்குத் தேவையான சகல தேவைகளையும் நிறைவுறச் செய்து அப்பாடசாலையை சகல வசதிகளுமுடைய பாடசாலையாக்கினார்.

வேலணையில் உள்ள மிகச் சிறந்த பாடசாலைகளில் ஒன்றாகக் கருதப்படக் கூடியதாகக் கல்வியின் தரத்தை உயர்நிலையடைய வைத்தார். பாடசாலையைத் தாபித்த சொற்ப காலத்திலேயே சகல வசதிகளுமுடைய பாடசாலையாகவும் உயர்கல்வித் தரமுடைய பாடசாலையாகவும் ஆக்கியதால் ஊர் மக்களின் பெருமதிப்புக்குரியவரானார். இவர் அப்பாடசாலையிலிருந்து ஒற்வு பெறும்போது ஊர் மக்கள் திரண்டு மிகச் சிறந்த பிரியாவிடை விழாவைச் செய்து அவரைக் கௌரவித்தார்கள்.

தற்கால ஆசிரியர்மார் தாங்கள் ஆற்றும் பணிக்காக சம்பளம் பெறுகிறார்கள். ஆகவே நாங்கள் அவர்களை ஏன் அதிகம் மதிக்கவேண்டும் என்ற கருத்து பொதுமக்களிடையே நிலவுகிறது. அதனால் முன்பு ஆசிரியர்மாருக்கு இருந்த மதிப்பு தற்காலத்தில் சிறிது குறைவாகவே இருக்கிறது. ஆனால் திரு. ஐயம்பிள்ளை பொன்னையா அவர்கள் ஆசிரியராகக் கடமையாற்றிய காலம் “எழுத்தறிவித்தவன் இறைவனாவான்” என்று கருதப்பட்ட காலம். அதனாலும் அவரது ஆசிரியத் தொண்டின் சிறப்பாலும் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்துடையவராகவும் ஊரவர்களால் நன்கு மதிக்கப்பட்டவராகவும் சிறப்புற வாழ்ந்தார்.

## வேலணைக் கிராமச் சங்க உறுப்பினர், உபதலைவர்

வேலணைக் கிராமச் சங்கத்தில் ஐந்தாம் வட்டார உறுப்பினராக 1945 ஆம் ஆண்டு தொடக்கம் 1951 ஆம் ஆண்டு வரை இருதடவைகள் இருந்தார். கிராமச்சங்க உபதலைவராகவும் இருந்துள்ளார். தனது வட்டாரத்திற்கு சிறப்பாகவும் வேலணைக்குப் பொதுவாகவும் அநேக அபிவிருத்தி வேலைகளைச் செய்து முடித்துள்ளார்.

## வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மாண்புறு தலைவர்

ஐயம்பிள்ளை-பொன்னையா அவர்கள் வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராக அமர்ந்து பல ஆண்டுகள் கடமையாற்றி சங்கத்தை மிக உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்தார். அன்றியும் வேலணைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க எல்லைக்குட்பட்ட வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு மக்களுக்கு சங்கத்தால் செய்யவேண்டிய நன்மைகள் யாவற்றையும் குறைவின்றிச் செய்து முடித்தார். அதனால் அவர்களின் நன்றியையும் நன்மதிப்பையும் பெற்றார்.

## வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் ஒப்புவமையற்ற தலைவர்

திரு ஐயம்பிள்ளை – பொன்னையா அவர்கள் 1956 ஆம் ஆண்டு தொடக்கம் 1973 ஆம் ஆண்டுவரை 17 ஆண்டுகள் வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தின் பொற்காலமெனப் பலரும் பாராட்டக் கூடிய வகையில் அரும்பெரும் சேவைகளைச் செய்தார். இவர் செய்த சேவைகள் எண்ணிலடங்கா.

1. வேலணையில் இரண்டு நெசவாலைகளைத் தாபித்து அதன் மூலம் நூற்றுக்கணக்கான பெண் பிள்ளைகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தார். அந்த இரண்டு நெசவாலைகளுக்கும் நிரந்தரக் கட்டிடங்களையும் அமைத்துக் கொடுத்தார்.
2. குளங்களைப் பதிப்பித்தல், குளக்கட்டுக் கட்டுவித்தல் ஆகிய வேலைகளை சிரமதானம் மூலம் செய்வித்து அவற்றைச் செய்து முடித்த பல நூற்றுக்கணக்கானோருக்கு ஊதியமும் பெற்றுக் கொடுத்தார்.
3. வேலணை கிழக்கில் உள்ள ஒடுக்கமான ஒழுங்கைகளை அகலுவித்துக் கொடுத்து ஊர்மக்களின் போக்குவரத்திற்கு உதவி செய்தார்.
4. வேலணை மக்களின் குடிதண்ணீர்த் தேவைக்காக சாட்டியில் ஒரு கிணறு வெட்டிக் கட்டிக் கொடுத்தார்.
5. சோழாவத்தைச் சுடலைக்கிணறு, செம்படவன் காட்டுச் சுடலைக் கிணறு ஆகிய கிணறுகளை வெட்டிக் கட்டுவித்துக் கொடுத்தார்.
6. வேலணை கிழக்கில் குடிநீர் கஷ்டமான பகுதிகளில் குடிநீர் வழங்க ஏற்பாடுகளைச் செய்தார்.

7. கலைமகள் சனசமூக நிலையம், வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையம் ஆகிய நிலையங்களுக்கு வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கமூலம் நிரந்தரக் கட்டிடங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டன.
8. வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் ஆண்டு ஆறு வகுப்பில் சேரும் புதிய பிள்ளைகளுக்கு கட்டிடவசதி தளபாட வசதிகள் இல்லாமல் இருந்ததால் அவர்களை அவ்வித்தியாலயத்தில் சேர்க்க முடியாதநிலை காணப்பட்டது. புதிய பிள்ளைகளைச் சேர்க்காமல் விடக்கூடாது என்று கருதி வேலணை மேற்கு கிராம முன்னேற்றச் சங்கம் சரவணை கிராம முன்னேற்றச் சங்கம் ஆகியவற்றின் உதவியையும், புதிய பிள்ளைகளின் பெற்றார் உதவியையும் பெற்று ஒவ்வொரு ஆண்டும் கொட்டில்களை அமைத்தும் புதிய தளபாடங்களைச் செய்வித்துக் கொடுத்தும் புதிய பிள்ளைகளைச் சேர்க்க வசதிசெய்து கொடுத்தார். இவ்வாறு பல ஆண்டுகள் இவ்வசதி செய்து கொடுக்கப்பட்டது.
9. வேலணை சேர் வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் ஐந்து வகுப்பறைகள் கொண்ட 100 அடி நீளமான மண்டபமும் ஒரு களஞ்சிய அறையும் அரசாங்க நிதியுதவியுடன் வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கத்தால் கட்டிக் கொடுக்கப்பட்டன.
10. வெங்காயக்கூடை பின்னல் போன்ற குடிசைக் கைத்தொழில்களை உண்டாக்கி அவற்றின் மூலம் அனேகருக்கு வேலை வாய்ப்புப்பெற வழிசெய்தார்.

மேலே காட்டப்பட்ட அபிவிருத்தி வேலைகளைவிட இன்னும் அநேக அபிவிருத்தி வேலைகளை வேலணை கிழக்கு கிராம முன்னேற்றச் சங்கமூலம் செய்து முடிக்கப்பட்டன.

## சமயத்தொண்டு

திரு ஐயம்பிள்ளை – பொன்னையா அவர்கள் அருள்மிகு பள்ளம்புலம் முருகமூர்த்தி சுவாமி கோவில் பரிபாலன சபையில் போஜகராகவும், பொருளாளராகவும் இருந்து அக்கோவிலில் அநேக திருப்பணிகளை நிறைவேறச் செய்தார். இவர் சமய நூல்களின் புலமை பெற்று விளங்கியபடியால் அவரது வீட்டுக்கு அண்மையில் உள்ள கோவில்களில் நடக்கும் கந்தபுராணப் படிப்பு, திருவாதவூரடிகள் புராணப் படிப்புகளில் பயன்சொல்லி அதாவது விளக்கவுரை சொல்லி வந்தார். இவை போன்ற அநேக சமயப் பணிகளைச் செய்துவந்தார்.

## இறுதிக் காலம்

திரு ஐயம்பிள்ளை – பொன்னையா ஆசிரியர் அவர்கள் தனது பிற்காலத்தில் மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகளுடன் கூடி வாழ்ந்து சந்தோசமாக இருந்தார். அன்றியும் மிகுந்த கடவுள் பக்தியினாலும் சமய நூல்களை வாசித்து அமைதியும் ஆறுதலும் பெற்று வாழ்ந்து வந்தார்.

திரு ஐயம்பிள்ளை – பொன்னையா ஆசிரியரின் மறைவு அவரது குடும்பத்திற்கு மட்டுமன்றி வேலணைக் கிராமத்திற்கே பேரிழப்பாக அமைந்துவிட்டது.

“நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு”

ச. மாணிக்கவாசகர்
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

வேலணை, 2
1-8-1993

தகவல்: பொன். பஞ்சலிங்கம்
(மகனார்)